# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 04.05.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்கள், அவர்களை சந்திப்பதற்காக, அவர்கள் வெளிப்படுத்திய உணர்வுகள், அவர்களைக் காண்பதில் அவர்களுக்கு இருந்த பேரார்வம் தொடர்பான சம்பவங்களை கூறவுள்ளேன்.

**ஹஸ்ரத் மியான் முஹம்மது ஸஹீருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருநாள் உட்கார்ந்திருந்த போது உள்ளத்தில் காதியான் செல்வதற்கான எண்ணம் பொங்கி எழுந்தது. இது எனது எண்ணமாகும் என்று நான் சகோதரர் முன்ஷி சிராஜுத்தீன் சாஹிபிடம் இதுபற்றி கூறினேன். அப்போது என்னிடம் செலவிற்காக எந்த பணமும் இருக்கவில்லை. சகோதரர் முன்ஷி சிராஜுத்தீன் சாஹிப் அவர்கள் எனக்கு ஒரு ரூபாய் தந்து இப்போது என்னிடம் ஒரு ரூபாய் தான் இருக்கின்றது. என்னிடம் பணம் இருந்திருந்தால் இன்னும் தந்திருப்பேன் என்றார். அதற்குப் பிறகு நான் கர்ஸி மன்சூர் அஹ்மது சாஹிபிடம் இதுபற்றி கூறினேன். அவரிடம் நான் காதியான் செல்கின்றேன் என்றேன். அவர் நானும் வருகின்றேன் என்றார். மறுநாள் நாங்கள் இருவரும் காதியானுக்கு பயணமானோம். பட்டாலாவிலிருந்து கால்நடையாக நடந்து ளுஹர் நேரத்தில் காதியான் சென்று சேர்ந்தோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்தித்தது உள்ளத்திற்கு ஆறுதல் ஏற்பட்டது. அல்ஹம்துலில்லாஹ் அலா ஸாலிக்.

**பிறகு எழுதுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலமும் மிகவும் இன்பம் நிறைந்த காலக்கட்டமாக இருந்தது. அவர்களது சமூகத்தில் சென்ற பிறகு எங்களுக்கு பின்னால் என்ன நடந்து கொண்டிருக்கின்றது? என்பதைப் பற்றி எதுவும் தெரியாமல் இருந்தது. உள்ளம் அவர்களை விட்டும் பிரிய விரும்பாது. அப்போது நாங்கள் காதியான் சென்றதும் எனது மாமனார் காஸி ஸெய்னுல் ஆபிதீன் சாஹிபும் அங்கு வந்திருப்பதை நாங்கள் பார்த்தோம். நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். இந்த தடவை நான்கைந்து நாட்கள் வரை நாங்கள் காதியானில் தங்கினோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் சேர்ந்து தொழுவதற்கான சந்தர்ப்பத்தை அல்லாஹ் வழங்கினான். எம்மைப் போன்ற பலவீனமானவர்கள் இந்த அருளுக்குரிய காலத்தில் பிறக்கச் செய்து அந்த அருளுக்குரிய நபரை சந்திக்க வைத்தது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருளாகும். அல்ஹம்துலில்லாஹ் அலா ஸாலிக்.

**ஹாஜி முஹம்மது மூஸா சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

அந்தக் காலத்தில் பல வருடங்களாக எனது வழிமுறை இவ்வாறாக இருந்தது. அதாவது, நயா என்ற ஸ்டேஷனில் அங்கிருந்த ஒரு நபரிடம் கடினமான டயர்களை உடைய சைக்கிள் இருந்தது. அந்த சைக்கிள் டயர்களில் காற்றுக்குப் பதிலாக ரப்பர் மட்டும் இருந்தது. ஜுமுஆ நாளன்று நான் லாஹூரிலிருந்து பட்டாலா வரை இரயிலில் வருவேன். அங்கிருந்து சைக்கிளில் பயணம் செய்து காதியான் செல்வேன். ஜுமுஆ தொழுகையை தொழுத பிறகு மீண்டும் சைக்கிளில் பயணம் செய்து பட்டாலாவுக்கு திரும்ப வருவேன். பிறகு அங்கிருந்து இரயிலில் பயணம் செய்து லாஹூர் வருவேன். ஜுமுஆவில் கலந்து கொள்ள இது அவரது வழிமுறையாக இருந்தது. லாஹூரிலிருந்து ஜுமுஆ தொழுவதற்காக காதியான் செல்வார்கள். 11 அல்லது 12 மைல்கள் வரை – இன்னும் சொல்வதென்றால் போவதற்கும் வருவதற்கும் சேர்த்து 22 மைல்கள் வரை சைக்கிளில் அவர்கள் பயணம் செய்துள்ளார்கள்.

**பிறகு டாக்டர் ஸெய்யது குலாம் கோஸ் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

நான் முதன்முதலாக 1901 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காதியான் வந்து நேரடியாக ஹஸ்ரத் சாஹிபின் கைகளில் பைஅத் செய்தேன். இதற்கு முன் நான் 1900 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எழுத்து மூலம் பைஅத் செய்திருந்தேன். அப்போது நான் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களிடம் நமது ஜமாஅத்தின் வஸீபா பற்றி கூறுங்கள் என்றேன்.

**அதற்கு மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

ஜமாஅத்தின் வஸீபா இதுவாகும். அதாவது அடிக்கடி காதியான் வர வேண்டும். அப்போது உடனடியாக எனக்கு காதியானில் வீடு கட்ட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதன் மூலம் பெற்றோர்களும் மனைவியும் பிள்ளைகளும் இங்கே இருக்க வேண்டும். எப்போது விடுப்பு நாட்கள் வந்தாலும் நேராக காதியானுக்கு வந்து தங்கி விடலாம். நான் வேலை பார்த்து வந்த கிழக்கு ஆப்பிரிக்காவிற்கு திரும்பிச் சென்றதுமே நான் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களது பெயருக்கு 600 ரூபாய் அனுப்பி வைத்தேன். அந்த தொகையில் எனக்காக வீடு கட்டும்படி கூறியிருந்தேன். ஆனால் மூன்று வருடங்கள் கழிந்த பிறகு நான் திரும்பி வந்த சமயத்தில் மவ்லவி சாஹிப் அவர்கள் என்னிடம் நான் கொடுத்த தொகையை திருப்பித் தந்து விட்டு எனக்கு இதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று கூறி தன்னை மன்னித்து விடும்படி கூறினார்கள். மவ்லவி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் சாஹிப் அவர்களது வீட்டின் மாடியிலுள்ள அறையில் இருந்து வந்தார்கள். தொகையைத் திருப்பித் தரும்போது அவர்கள் இந்த எல்லா பெரிய பெரிய வீடுகளும் அஹ்மதிகளுடையது தான் என்றார்கள். அதாவது அப்போது மற்றவர்களின் அதாவது இந்துக்களின் வீடுகளைச் சுட்டிக் காட்டியவாறு இவ்வாறு கூறினார்கள். டெபுட்டியாக இருந்த ஒரு இந்த சகோதரரின் வீட்டைச் சுட்டிக்காட்டியவாறு இவ்வாறு கூறினார்கள். இப்போது அங்கு நமது அலுவலகங்கள் உள்ளன.

**தொடர்ந்து அவர் எழுதுகின்றார்:**

ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் இறை ஞானத்தின் சிகரத்தை அடைந்திருந்தார்கள். அவர் கூறிய விஷயங்களை அல்லாஹ் நிறைவேற்றி வைத்தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறிய விஷயங்களைத் தான் அவர்கள் கூறி வந்தார்கள். அது அவர்களது ஈமானை எந்த அளவு அதிகரிக்கச் செய்தது என்றால் இவையெல்லாம் நமக்கு கிடைக்கப் போகின்றது என்ற உறுதி அவர்களுக்கு இருந்தது. அவை எல்லாம் கிடைத்ததையும் அல்லாஹ் காட்டித் தந்தான்.

**ஹஸ்ரத் மியான் ஸஹீருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

மிர்ஸா சாஹிப் உண்மையிலேயே பீர் ஆக இருந்து அவர்களை நாம் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் எனது முடிவு எப்படிப்பட்டதாக இருக்கும் என்று ஒருநாள் இந்த இறை அடியானுக்கு சிந்திக்கத் தோன்றியது. ஒருநாள் நான் எனது மாமியின் மகன் எனது சகோதரரான முன்ஷி அப்துல் கபூர் சாஹிப் அவர்களிடம் நான் நாளை காலை அல்லது மாலை காதியான் செல்ல இருக்கின்றேன் என்று கூறினேன். இது இவரது பைஅத்திற்கு முன்னுள்ள சம்பவமாகும். அவர் நான் கூறியதைக் கேட்டு விட்டு எவரிடமும் இதுபற்றி கூற வேண்டாம். நானும் உன்னுடன் வருவேன் என்றார்கள். அவர்கள் கூறிய இந்த விஷயத்தைக் கேட்டு எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. நாங்கள் இருவரும் அடுத்த நாள் அதிகாலையிலேயே காதியானுக்கு பயணமானோம். அப்போது கோதுமை அறுவடை செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. நாங்கள் இருவரும் ஸ்டேஷனுக்கு சென்று சேர்ந்ததும் குதிரை வண்டியில் நாங்கள் சென்றோம். எங்களுக்கு முன்னால் வண்டியில் ஒரு பயணி அமர்ந்திருந்தார்கள். அவர்கள் மியான் நூர் அஹ்மது காபுலி ஆவார்கள். நாங்கள் குதிரை வண்டியில் பயணம் செய்து ளுஹர் நேரத்தில் காதியான் வந்து சேர்ந்தோம். உளூ செய்து நாங்கள் இருவரும் மஸ்ஜிது முபாரக்கிற்கு வந்து சேர்ந்தோம். அந்தப் பள்ளிவாசல் மிகவும் சிறியதாக இருந்தது. நாங்கள் செல்வதற்கு முன்னரே அங்கு ஐந்தாறு பேர் அமர்ந்திருந்தனர். நான் அவர்களை நன்றாக உற்றுப் பார்த்தேன். ஆனால் அவர்களில் நான் பார்க்க விரும்பிய அந்த உருவம் எங்களுக்கு தென்படவில்லை. அதாவது ஹஸ்ரத் மஸீஹ்

மவ்வூது (அலை) அவர்களைப் போன்ற தோற்றத்தை உடைய எவரையும் அங்கிருந்தவர்களில் அவரால் பார்க்க முடியவில்லை.

கூறுகின்றார்கள்: 10 அல்லது 15 நிமிடம் கழிந்த பிறகு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் வந்தார்கள். குறுகிய மாடிப்படிகள் முடிகின்ற இடத்திலுள்ள கதவு அருகில் வந்து அவர்கள் நின்றார்கள். நான் அவர்களைப் பார்த்து விரைவாக எழுந்து நின்றேன். சிறந்த பெருந்தகை ஒருவர் இருக்க முடியும் என்றால் அவர் இவராகத்தான் இருக்க முடியும் என்று எனது உள்ளத்தில் தோன்றியது. அதாவது, ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், நீங்கள் அமருங்கள். ஹஸ்ரத் சாஹிப் இப்போது வருவார்கள் என்று கூறினார்களா. அன்னார் மிகுந்த தொலைநோக்குப் பார்வையுடையவர்களாக இருந்தார்கள். இவர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து நீங்கள் உட்காருங்கள். இப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வருவார்கள் என்று கூறினார்களா. நான் அவர்கள் கூறியதைக் கேட்டு உட்கார்ந்தேன். மேலும் இப்போது வரக்கூடிய நபர் இவரை விட அதாவது ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை விட சிறந்தவராகத்தான் இருப்பார் என்பதைப் புரிந்து கொண்டேன். 5 அல்லது 6 நிமிடங்கள் கழிந்த பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஊழியர் ஹஸ்ரத் சாஹிப் வருகின்றார்கள் என்று தெரிவித்தார்கள். இரண்டு மூன்று நிமிடங்கள் கழிந்த பிறகு மஸ்ஜித் முபாரக்கின் சிறிய கதவு திறந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மஸ்ஜித் முபாரக்கிற்குள்ளே வந்தார்கள். சூரியன் பகல் வேளையில் முழுமையாக மேலே வந்திருப்பது போன்று அப்போது எனக்கு தெரிய வந்தது. இறைவன் மீது ஆணையாக! எப்படிப்பட்ட தோற்றத்தைப் பார்க்க வேண்டும் என்று உள்ளத்தில் ஆசை இருந்ததோ அதைவிட பன்மடங்கு சிறப்புமிக்க தோற்றத்தில் நான் அவர்களைப் பார்த்தேன். ஹஸ்ரத் சாஹிப் அங்கு வந்ததும் அங்கு அமர்ந்திருந்த நாங்கள் எல்லாரும் அவர்களைக் கண்ணியப்படுத்தும் முகமாக எழுந்து நின்றோம். அவர்களது ஒளிமிக்க அருளுக்குரிய முகத்தைப் பார்த்து உள்ளத்திற்கு அமைதி ஏற்பட்டது. மற்ற மிக மிக அழகிய தோற்றங்கள் அனைத்துமே அவர்களுக்கெதிரில் ஒன்றுமற்றவையாக ஆகி விட்டன.

**ஹஸ்ரத் ஷேக் அப்துல் கரீம் சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் 1903 ஆம் ஆண்டு ஹகீம் அஹ்மது ஹுஸைன் சாஹிப் லாயல்பூரி அவர்கள் மூலமாக அஹ்மதியானேன். ஹகீம் சாஹிப் அவர்கள் லாஹூர் வாசியாக இருந்தாலும் லாயல்பூரில் அவர்கள் மருத்துவப் பணிகளைச் செய்து வந்தார்கள். அங்கேயே அவர்கள் வஃபாத் ஆகி விட்டதால் லாயல்பூரி என்று அவர்களை அழைப்பது பிரசித்தி பெற்ற ஒன்றாகி விட்டது. அவர்கள் தமது பணி நிமித்தமாக கராச்சி வந்தார்கள். அவரது தப்லீகின் மூலம் நான் அஹ்மதியாகி விட்டேன். 1904-ல் நான் லாஹூர் சென்ற சமயத்தில் அவர்களது வீட்டில்தான் தங்கினேன். நான் ஜுமுஆ தொழுகை தொழுவதற்காக கும்தியிலுள்ள பள்ளிவாசலுக்குச் சென்ற போது அங்கு ஹுஸூர் வரப்போகின்றார்கள் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. மேலும் ஹுஸூரின் ஒரு சொற்பொழிவும் இங்கு நடைபெறும் என்றும் கூறினர். இந்த அறிவிப்பைக் கேட்டு நான் அங்கேயே இருந்தேன். ஹுஸூர் வந்த போது மியான் மராஜுத்தீன் சாஹிப் அவர்களது வீடு அப்போது கட்டப்பட்டு வந்தது. சில அறைகள் முழுமையாக கட்டப்பட்டிருந்தது. ஹஸ்ரத் சாஹிப் அங்கு தங்குவதை விரும்பினார்கள். அங்கு ஜுமுஆ தொழுகையையும் தொழுதார்கள். ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் குத்பா உரை நிகழ்த்தினார்கள். தொழுகையையும் அவர்களே தொழ வைத்தார்கள். நான் பித்தனாகத் திரிந்து கொண்டிருந்தேன். ஹஸ்ரத் சாஹிபுடன் ஏதாவதொரு வகையில் சந்திப்பு நிகழ்ந்து விட வேண்டும் என்று விரும்பினேன். இந்த தருணத்தில் டாக்டர் யாகூப் பேக் சாஹிப் அவர்கள் எனது கைகளைப் பிடித்து என்னை வலுவாகத் தள்ளி முன்னே செல்ல வைத்தார்கள். நான் முதல் ஸஃப்பில் ஹஸ்ரத் சாஹிபின் இடது பக்கத்தில் அவர்களோடு சேர்ந்து நின்றேன். நான் அத்தஹிய்யாத்தில் அமர்ந்த போது எனது பாவங்களை நினைத்துப் பார்த்து அத்துடன் ஹஸ்ரத் சாஹிபுடன் எனது தோள்கள் ஒட்டியிருப்பதை எண்ணிப்பார்த்து என்னையும் அறியாமல் அழ ஆரம்பித்தேன். விக்கலும் வர ஆரம்பித்தது. ஹஸ்ரத் சாஹிப் எனது இந்த நிலையைப் பார்த்து எனது முதுகில் தனது நேசமிக்க கரங்களால் தடவி எனக்கு ஆறுதலை வழங்கினார்கள்.

அத்தஹிய்யாத்தில் அமர்ந்திருந்ததால் அவர் ஸலாம் கூறிய பிறகே அன்புடன் தமது கைகளால் தடவி இருப்பார்கள். தொழுகையின் போது இவ்வாறு நடக்கவில்லை.

எவ்வாறிருப்பினும், தொடர்ந்து அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் சாஹிப் காதியான் சென்ற சமயத்தில்இந்த எளியவனும் அவர்களுடன் சென்றேன். அங்கு போய் சேர்ந்ததுமே வழக்கில் ஆஜராக வேண்டியது இருந்ததால் குறிப்பிட்ட அந்த தேதியில் குர்தாஸ்பூர் செல்ல வேண்டியது வந்தது. நான் அவர்களுடன் சென்றேன்.

ஒருமுறை அஸர் தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் இவ்வாறு கூறினார்கள்: நாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹை பார்த்து விட்டோம். மேலும் பைஅத் செய்து விட்டோம். நமது மன்னிப்பிற்கு இதுவே போதுமானது என்று மக்கள் கருதுகின்றனர். அதாவது பைஅத் செய்து விட்டால் எல்லா பணிகளும் நடந்து விட்டது என்பது மக்களது எண்ணமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

அசல் விஷயம் இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன் ஆகும். இதன் மூலமே மனிதன் தனது இலக்கை அடைய முடியும். நாம் வழிகாட்டுவதற்காக மட்டுமே வந்தோம். நாம் அந்த வழியைக் காட்டி விட்டோம்.

இறைவனை வணங்குவது, உதவியை அல்லாஹ்விடம் கேட்பது ஆகிய விஷயங்களைத் தேட வேண்டும். இதற்காக முயற்சி செய்ய வேண்டும். இதுவே அசல் விஷயமாகும். மேலும் இதுதான் உயர்ந்த தரத்தின் பக்கம் நம்மைக் கொண்டு செல்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பைஅத்தில் வந்ததற்கான அந்த நோக்கத்தை அது நிறைவேற்றுகின்றது.

**ஹஸ்ரத் சாஹிப்தீன் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

1904 ஆம் ஆண்டு நடந்த சம்பவம் என்று நினைக்கின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த இரயில் வண்டி மூலமாக லாஹூர் வருகின்றார்கள் என்று லாஹூர் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு தகவல் கிடைத்தது. நாங்கள் ஹுஸூர் அவர்களை வரவேற்பதற்காக இரயில் நிலையத்திற்கு சென்றோம். அந்த நாளில் இரண்டு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டி அதிகமாக பழக்கத்தில் இருந்து வந்தது. அந்த வண்டியை ஹுஸூருக்காக நாங்கள் தயார் செய்திருந்தோம். ஹுஸூர் அந்த வண்டியில் ஏறியதும் இளைஞர்களாகிய நாங்கள் அந்த வண்டியிலிருந்த குதிரைகளை அகற்றி விட்டு அந்த வண்டியை நாங்களே இழுத்துச் செல்ல விரும்பினோம். இது அவர்கள் காட்டிய ஆழ்ந்த பற்றின் முன்மாதிரி ஆகும்.

இதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவர்களுக்கு என்ன பதில் கூறினார்கள் என்று பாருங்கள். அந்த மக்கள் அந்த தேரிலிருந்து குதிரைகளை வெளியேற்றினர். நாங்களே அதனை இழுக்க விரும்பினோம். ஹுஸூர் அவர்கள் எங்களது இந்த செயலைப் பார்த்து நாம் மனிதனை முன்னேற்றமடையும்படி செய்து உயர் தகுதி பெற்ற மனிதனாக ஆக்குவதற்காக வந்துள்ளோம். அதற்கு மாற்றமாக மனிதனை கீழே தாழ்த்தி அனை மிருகமாக்குவதற்கு நாம் வரவில்லை. அவர்களை வண்டி இழுக்கும் பணியைச் செய்ய வைக்க வரவில்லை என்று கூறினார்கள். அவர்கள் கூறிய கருத்துக்கள் இதுதான். சொற்கள் ஒருவேளை கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கலாம். குத்தாம்களாகிய நாங்கள் உடனடியாக அந்த செயலைச் செய்வதை விட்டு விட்டோம். குதிரைகளைப் பூட்டி வண்டியைக் கொண்டு செல்ல ஆரம்பித்தோம். உடனடியாக நான் வண்டிக்கு பின்னால் நின்றவாறு ஹுஸூர் அவர்களுக்காக குடை பிடித்தேன். இவ்வாறு குடை பிடிப்பதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. நான் ஹுஸூருக்கு குடை பிடிக்கக் கூடியவனாக இருந்தேன் என்பதில் நான் பெருமை கொள்கின்றேன்.

**ஹஸ்ரத் சவுத்ரி குலாம் ரஸூல் சாஹிப் பஸ்ரா அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

1907 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆண்டு மாநாட்டின் போது நடந்த சம்பவம் இதுவாகும். வியாழக்கிழமையின் மாலை வேளையில், நாளை காலை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்

உலாவச் செல்வார்கள் என்பது தெரிய வந்தது. அப்போதிருந்த வழிமுறை என்னவென்றால், அதிகமான மக்கள் கூட்டத்தால் நெரிசல் ஏற்படும் சமயத்தில் அவர்களைச் சுற்றி கைகோர்த்து நின்றவாறு வட்டமாக நாங்கள் நிற்போம்.

இந்த சம்பவத்தை ஏற்கனவே எங்கோ நான் கூறியுள்ளேன். எவ்வாறிருப்பினும், இந்த மக்களுக்கு ஹஸ்ரத் சாஹிபை சந்திப்பதில் உள்ள இன்பம், ஆர்வம், ஒருமுறை அவர்களைப் பார்க்கத் துடிக்கின்ற அவர்களது பேரார்வம் போன்றவை எவ்வாறு மக்கள் அவர்களைச் சுற்றி வட்டமாக நின்றனர் என்பது தெரிய வந்தது.

கூறினார்கள்: அதிகமாக கூட்டம் இருக்கும்போது நாங்கள் கைகோர்த்து அவர்களைச் சுற்றி நின்றவாறு வளையத்தை ஏற்படுத்திக் கொள்வோம். இந்த வளையத்திற்கு மத்தியில் அவர்கள் செல்வார்கள். வட்டமாகச் சுற்றி நின்றவாறு மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நடுவில் செல்ல வைத்தார்கள். அதிகமான நெரிசலின் காரணமாக அவர்கள் மீது எவரும் மோதி விடக் கூடாது. அவர்களை தள்ளி விடக்கூடாது என்பதற்காக அவ்வாறு செய்தார்கள்.

கூறுகின்றார்கள்: நான் என்னுடன் இருந்த செக் எண் 99 கிழக்கிலுள்ள கோந்தல் ஜமாஅத்தின் அமீர் மவ்லவி குலாம் முஹம்மது கோந்தல், சவுத்ரி மியான் கான் சாஹிப் கோந்தல், சவுத்ரி முஹம்மது கான் சாஹிப் கோந்தல் மர்ஹூம் ஆகியோருடன் ஆலோசனை செய்தேன். இறைவன் நல்வாய்ப்பை வழங்கினால் காலையில் அவர்கள் உலாவச் செல்லும் போது நாம் அவர்களைச் சுற்றி நின்றவாறு கைகோர்த்து வளையத்தை ஏற்படுத்துவோம். இவ்வாறு நாம் ஹுஸுர் அவர்களை நன்றாக பார்க்க முடியும். முக்கிய நோக்கங்களில் ஒன்றாக பாதுகாப்பு கொடுப்பதும் இருந்தது. அவர்களைப் பார்க்க வேண்டும் என்பதும் இருந்தது. காலையில் நாங்கள் ஃபஜ்ர் தொழுகையை நிறைவேற்றிய பிறகு எல்லா மக்களும் ஹுஸுர் அவர்களுக்காக காத்திருந்தவாறு பஸாரில் ஒன்றுசேர ஆரம்பித்தனர். ஹுஸுர் அவர்கள் உலாவச் செல்வதற்காக வெளியே எந்தப் பக்கமாக வருவார்கள் என்பது முழுமையாக எங்களுக்கு தெரியாது. ஆனால் எந்த பக்கத்தில் இருந்தாவது சிறிய சப்தம் கேட்டாலும் அவர்கள் இந்த வழியாகத்தான் வெளியே உலாவுவதற்காக செல்வார்கள் என்று கருதியவாறு மக்கள் விட்டில்களைப் போல் அந்தப் பக்கம் ஓடுவார்கள். சிறிது நேரம் வரை இப்படியே அங்குமிங்கும் மக்கள் கூட்டம் வந்தும் போயும் இருந்தது. இறுதியில் வடக்கு திசை நோக்கி ரேத்தில் செல்லாவின் பக்கம் ஹுஸுர் வெளியே உலாவுவதற்காக செல்வார்கள் என்று தெரிய வந்தது. ஏற்கனவே காத்திருந்த நாங்களும் ஆடைகளை இறுக்கக் கட்டிக்கொண்டவாறு தயாரானோம். எப்போது ஹுஸுர் வெளியே கதவருகில் வருவார்களோ அப்போதே கைகளைக் கோர்த்து நின்றவாறு வளையத்தை ஏற்படுத்தி அவர்களை நடுவில் செல்ல வைப்போம் என்று கூறியவாறு நாங்கள் தயாராக இருந்த சமயத்தில் நாங்கள் பார்த்தது என்னவென்றால், அவர்கள் ஒரு பெரும் மக்கள் கூட்டத்தின் நடுவே வந்து கொண்டிருந்தார்கள். இந்தப் பெருங்கூட்டம் எங்களது எண்ணத்தில் மண்ணைப் போட்டது. அது ஊர்ந்தவாறு முன்னே சென்று விட்டது. எந்த அளவு நெரிசல் இருந்தது என்றால் நாங்கள் அவர்களுக்கு அருகில் செல்லவே முடியவில்லை. ரேத்தி செல்லாவின் மேற்குப் புறத்தில் ஒரு ஆலமரத்திற்குப் பக்கத்தில் ஒரு மரம் இருந்தது. அவர்கள் இந்த மரத்திற்குக் கீழே நின்றார்கள். அங்கிருந்தவாறு அவர்கள் மக்களிடம் முஸாபா செய்ய ஆரம்பித்தார்கள். ஒரு சஹாபி ஹஸ்ரத் சாஹிபிற்காக நாற்காலி கொண்டு வர வேண்டும் என்று கூறினார். அப்போது அவர்கள் கூறினார்கள்.

என்னிடம் அல்லாஹ் முதலிலேயே கூறி விட்டான். மக்கள் பெரும்பாலான எண்ணிக்கையில் உன்னிடம் வருவார்கள். ஆனால் பஞ்சாபி மொழியில் உள்ள இல்ஹாம் இது. அதாவது தூ ஆகீனா நா தகீனா என்பதாகும். அதாவது, நீர் பதற்றமடைய வேண்டாம். விலகிச் செல்ல வேண்டாம். மக்கள் நெரிசல் காரணமாக அல்லது அவர்களை சந்திப்பதன் காரணமாக நீர் சோர்வடையவும் வேண்டாம். பிறகு அங்கு இவர்களுக்கும் முஸாபா செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

**பிறகு டாக்டர் உமருத்தீன் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

நான் ஹஸ்ரத் சாஹிப் அவர்களை முஸாபா செய்வதற்கு எந்த அளவு தாகமுடையவனாக இருந்தேன் என்றால் பலமுறை மக்கள் கூட்டத்தின் எட்டி உதைத்தலைக் கடந்து அவர்களை முஸாபா செய்து வந்தேன். பிறகும் கூட எனக்கு நிறைவு ஏற்படவில்லை. சில நேரங்களில் மக்கள் தள்ளி விடுவார்கள். பல கஷ்டங்களும் ஏற்பட்டன. எவ்வாறிருப்பினும் முயற்சி செய்து முஸாபா செய்ய முயற்சி செய்து வந்தார்கள்.

**டாக்டர் அப்துல்லாஹ் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

நான் பட்டாலாவிலிருந்து காதியான் சென்ற சமயத்தில் ஒரு முதிய பார்வையற்ற அஹ்மதியும் காதியான் செல்வதற்காக வந்திருந்தார்கள். ஒரு குதிரை வண்டியில் எனக்கு சிறிது இடம் இருக்கின்றதா? என்று அவர் என்னிடம் கேட்டார். அதற்கு நான் நீங்கள் எங்களது குதிரை வண்டியில் வாருங்கள் என்றேன். அதற்கு அவர் இல்லை. என்னிடம் எட்டனா இருக்கின்றது. நான் எனது சொந்த செலவில் காதியான் செல்வேன் என்று கூறினார். அதாவது இவர் அவரை இலவசமாக வந்து அமருங்கள் என்றார். ஆனால் அதற்கு அவர் இவ்வாறு அல்ல. என்னிடம் வண்டிக்கான கூலியை தருவதற்கான பைசா இருக்கின்றது. அதை செலுத்தி நான் செல்வேன் என்று கூறினார். இதன் மூலம் அவரிடம் இருந்த சுய கவுரவம், பிறரிடம் யாசிப்பதிலிருந்து வெறுப்பு, தன்மான உணர்வு ஆகியவற்றுடன் அவர் ஏழ்மையில் இருந்தும்கூட மீண்டும் மீண்டும் காதியான் வருவதன் மூலமே அவர் வாழ்க்கையைக் கழித்தார் என்பதும் தெரிகிறது. பார்வையற்ற நபராக இருந்தும் யாரிடமும் எதையும் கேட்டுப் பெறுவதில் அவருக்கு வெறுப்பு இருந்தது. இரண்டாவதாக, அவர் முயற்சி செய்து பைசாக்களை சேர்த்து வைத்து மீண்டும் மீண்டும் காதியான் வர முயற்சி செய்து வந்தார். அதன் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நட்பிலிருந்தும் பலனடைய அவர் விரும்பினார்.

**ஹஸ்ரத் மியான் சிராருத்தீன் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஹகீம் அஹ்மது தீன் சாஹிப் ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்காக லாஹூர் சென்ற போது நான் அவரை நகைச்சுவையாக அவரை கேலி செய்தேன். ஹகீம் சாஹிப் அவர்கள் நண்பரே! நீர் நம்முடைய ஆளாக இருந்து கொண்டு என்னை கேலி செய்கின்றீரா? என்று கேட்டார்கள். இந்த சொற்களைக் கேட்டு எனக்கு சிறிது வெட்க உணர்வு ஏற்பட்டது. எனது உள்ளம் மென்மையானது. அவர் கூறியதைக் கேட்டு நான் அவருடன் ஹுஸூரைப் பார்ப்பதற்காக சென்றேன். அப்போது இவர் அஹ்மதியாக இருக்கவில்லை. எனவே இவர் கேலி செய்துள்ளார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்க்கச் செல்கின்றார் என்று அறிந்து எதாவது கேலியாக கூறியிருக்கலாம். அவர் அவருக்கு சிறிது உணர்வை ஏற்படுத்தினார். இவருக்கு வெட்க உணர்வு ஏற்பட்டது. பிறகு நானும் அவர்களுடன் சென்றேன் என்று கூறுகின்றார்கள். ஆனால், ஒருபோதும் பைஅத் செய்வதற்கான எண்ணம் எனக்கு இருக்கவில்லை. அவர்களோடு சென்றேன். ஆனால் பைஅத் செய்யும் எண்ணம் எனக்கு இருக்கவில்லை. நான் காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களின் வீட்டை அடைந்ததும் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் உடல்நலமின்றி இருக்கின்றார்கள் எனக்கு தெரிய வந்தது. மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. ஹுஸூரிடம் யாரோ ஒருவர் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கின்றது. ஹுஸூர் அவர்களைப் பார்ப்பதற்காகவே அவர்கள் வந்துள்ளார்கள் என்று கூறினார். ஹுஸூர் அவர்கள் ஜன்னல் வழியாக தலையை வெளியே நீட்டினார்கள். அப்போது இந்த முகம் ஒருபோதும் பொய்யருடையதாக இருக்க முடியாது என நான் கணித்தேன். அதனால் நான் பைஅத் செய்து விட்டேன்.

**மலிக் நியாஸ் முஹம்மது சாஹிப் அவர்களின் மகன் மலிக் பரக்கத்துல்லாஹ் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

1905 ஆம் ஆண்டில் ஒருநாள், நாங்கள் அஸர் நேரத்தில் இவர் வசித்து வந்த ஜலந்தர் மாவட்டத்திலுள்ள ராஹோன் என்ற இடத்திற்க ஒரு தபால் கார்டு இவருக்கு வந்தது. அதில் ஹுஸூர் (அலை) அவர்கள் டெல்லி செல்கின்றார்கள். 8 அல்லது 9 மணிக்கு வண்டியில் பகுவாடா ஸ்டேஷனைக் கடந்து செல்வார்கள். ஹாஜி ரஹ்மத்துல்லாஹ் சாஹிப், சவுத்ரி ஃபெரோஸ் கான் சாஹிப் மர்ஹூம் ஆகியோர் என்னை டியூட்டியில் அமர்த்தினார்கள். நீங்கள் இளைஞராக இருக்கின்றீர்கள். நீங்கள் இப்போதே சென்று

காதியான் ஜமாஅத்திற்கு சென்று இதுபற்றிய தகவலை தெரிவியுங்கள் என்று கூறினார்கள். நான் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு நடந்து காதியானை அடைந்ததும் ஜமாஅத்திற்கு இதுபற்றிய தகவலைத் தெரிவித்ததும் அங்கிருந்த சிலரும் என்னுடன் சேர்ந்து கொண்டார்கள். நாங்கள் எல்லாருமே இவ்வாறு நடந்து ராஹோனிலிருந்து 30 மைல் தூரத்திலுள்ள பகுவாடா ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தோம். சுபுஹ் தொழுகையைத் தொழுதோம். ஸ்டேஷனில் முன்ஷி ஹபீபுர் ரஹ்மான் சாஹிப் மர்ஹூம் அவர்கள் ஹாஜிபூரில் உள்ளவர்கள சார்பாக ஜமாஅத் சகோதரர்களுக்கு தங்குவதற்கான ஏற்பாட்டை செய்திருந்தார்கள். பகல் நேரத்தில் அவர்களிடமிருந்துதான் உணவு வந்தது. இரயிலுக்கான நேரம் வந்ததும் இரயில் வந்து சென்றது. அப்போது ஹஸ்ரத் சாஹிப் அங்கிருந்து வரவேண்டிய தேதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது எங்களுக்கு தெரிய வந்தது. தகவல் கிடைத்ததற்கு ஏற்ப அன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வரவில்லை. வேறு நாளில் அவர்கள் வருவார்கள் என்று கூறி தேதி மாற்றப்பட்ட தகவல் வந்தது. இதனால் எங்களுக்கு பெரும் துக்கம் ஏற்பட்டது.

எழுதுகின்றார்கள்: அன்பின் ஆழ்ந்த பற்றின் காரணமாக இரவோடு இரவாக எந்த அளவு நாங்கள் நீளமான பயணத்தை மேற்கொண்டோம் என்றால் இப்போதுள்ள நிலையில் ஒரு அடி எடுத்து வைப்பது கூட கஷ்டமாக இருக்கின்றது. அவர்களைப் பார்ப்பதற்காக, சந்திப்பதற்காக இருந்த ஆர்வத்தில் நாங்கள் இரவோடு இரவாக பல மைல்கள் பயணம் செய்தோம். ஆனால் இப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வரமாட்டார்கள் என்பதை அறிந்ததும் பிறகு அதனால் பாதங்களில் ஏற்பட்ட வெடிப்புகளும் நினைவிற்கு வந்தது. இதனால் மிகவும் வருத்தம் ஏற்பட்டது. இதன் காரணமாக திரும்பிச் சென்ற போது நாங்கள் குதிரை வண்டிகளில் சென்றோம் என்று இவர் கூறுகின்றார்.

**ஹஸ்ரத் முன்ஷி காஸி மஹ்பூப் ஆலம் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

அஹ்மதிய்யத்தை இவர் ஏற்றுக் கொள்வதற்கு முன்பு நடந்த சம்பவம் இது என்று தெரிகிறது. அவர் கூறுகின்றார்:

நான் எட்டாவது வகுப்பில் மாணவராக இருந்த சமயத்தில் இங்கு லாஹூரில் ஹனஃபி மற்றும் வஹ்ஹாபி பிரிவினரிடையே பெரும் வாதம் நடைபெற்று வந்தது. நான் ஹனஃபி மத்ஹபை பின்பற்றி வந்தேன். வஹ்ஹாபிகளின் பள்ளிவாசலுக்கும் செல்ல வேண்டும் என்ற எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. அதனால் நான் சீனியா மஸ்ஜிதுக்கு செல்ல ஆரம்பித்தேன். நான் அவர்களது சபையில் அமர்ந்த போது அவர்கள் அல்லாஹ்வும் அவனது தூதரும் கூறியதைத் தவிர வேறு எதையும் கூறவில்லை என்று எனக்கு தெரிய வந்தது. எனது இயல்பு அஹ்லே ஹதீஸ் பிரிவினர் பக்கம் திரும்பியது.

சில நேரங்களில் வஹ்ஹாபிகளின் சபைகளில் ஹஸ்ரத் சாஹிப் பற்றியும் கூறப்பட்டது. காஃபிர். மஸீஹ் என்ற அவர்களது வாதம் இஸ்லாத்திற்கு எதிரானது என்று கூறப்பட்டது. அதனால் இயல்பாகவே எனக்கு இதன் பக்கம் கவனம் ஏற்பட்டது. பாவா ஹிதாயத்துல்லாஹ் சாஹிப் கூச்சா சாகு சவாரான் அவர்களின் மகன் வலியுல்லாஹ் சாஹிப் என்ற ஒருவர் அஹ்மதியாக இருந்தார். இவர்களிடம் நான் செல்ல ஆரம்பித்தேன். மேலும் அவரிடம் ஹஸ்ரத் சாஹிப் தொடர்பாக சில தகவல்களைப் பெற்றேன். நான் இஸ்திகாரா செய்யும்படி அவர்கள் எனக்கு கவனமூட்டினார்கள். இஸ்திகாராவிற்கான வழிமுறையை நான் அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டு இஸ்திகாரா செய்த போது அடுத்த நாள் இரவு 2.00 மணிக்கு இஸ்திகாராவிற்காக துஆவை ஓதி விட்டு நான் அப்போதுதான் தூங்கியிருப்பேன். கனவில் என்னிடம் ஒரு நபர் நீங்கள் எழுந்து முழங்காலிட்டு அமருங்கள். ஏனெனில், உங்களிடம் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் வருகின்றார்கள் என்று கூறினார். படியில் யாரோ ஒரு மனிதர் ஏறி வரும் சப்தமும் எனக்கு கேட்டது. அப்போது நான் கனவிலேயே முழங்காலிட்டு அமர்ந்தேன். இந்த தருணத்தில் மிகவும் வெண்மையின் நிறத்திலான ஆடையில் இருந்த மனிதர் என்னிடம் வந்தார்கள். அவர்கள் தனது ஒரு கையால் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களைப் பிடித்து என் முன்னால் நிறுத்தினார்கள். மேலும், ஹாஸர் ரஜுலு கலீஃபத்துல்லாஹி வஸ்மவு வஅத்தீவு என்று கூறினார்கள். பிறகு அவர் மீண்டும் திரும்பிச் சென்று மிர்ஸா சாஹிப் அருகில் நின்று தனது விரல்களால் தனது நெஞ்சில் கை வைத்தவாறு இதனையே கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பஞ்சாபி மொழியில் இவரையே இறைவன்

கலீஃபாவாக ஆக்கியுள்ளான். இவரைமஹ்தி என்று தெரிந்து கொள்! என்று கூறினார்கள். பிறகு நான்கு வரிகளில் ஒரு கவிதையும் படித்தார்கள். அதை நான் மறந்து விட்டேன். இதன் பொருள் நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவேன் என்பதாகும். அதற்குப் பிறகு நான் விழித்தெழுந்தேன். காலையில் நான் பள்ளிக்கூடம் செல்வதற்குப் பதிலாக காதியானுக்குப் பயணமானேன். இரயில் வண்டி பட்டாலா வரை சென்றது. ஏறக்குறைய மாலை நேரத்தில்தான் அது அங்கு போய் சேர்ந்தது. நான் பட்டாலாவில் பேருந்து நிலையத்திற்கு எதிரிலுள்ள சிறிய பள்ளிவாசலில் தொழுவதற்காக சென்றேன். அப்போது மக்கள் நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்? எங்கு செல்ல எண்ணியுள்ளீர்கள்? என்று கேட்டனர். அதற்கு நான் லாஹூரிலிருந்து வந்திருக்கிறேன். காதியான் செல்ல எண்ணியுள்ளேன் என்று கூறினேன். அவர்கள் ஹஸ்ரத் சாஹிப் அவர்களை ஏசிப் பேசினர். என்னை அங்கு செல்வதிலிருந்தும் தடுத்தனர். நான் எனது உறுதியான எண்ணத்தை வெளிப்படுத்தியதும் அவர்கள் என்னை பள்ளிவாசலை விட்டும் வெளியேற்றி விட்டனர். நான் பேருந்து நிலையத்திற்கு வந்தேன். சிலர் அங்கும் எனக்கு பின்னால் வந்தனர். என்னை காதியான் செல்வதிலிருந்தும் தடுத்து நிறுத்த மிகவும் முயற்சி செய்தனர். மேலும், நீங்கள் மாணவராக இருந்தால், நாங்கள் உங்களை இங்குள்ள பெரிய மியான் சாஹிபிடம் இருக்கும்படி செய்வோம். தங்கும் வசதி, ஆடைகள் ஆகியவற்றிற்கான ஏற்பாட்டையும் செய்வோம் என்று கூறினர். அதற்கு நான் அவர்களிடம் நான் முதலிலேயே லாஹூரில்தான் படித்து வருகின்றேன். அதனால் எனக்கு இங்கு படிக்க வேண்டிய தேவையில்லை. காதியானில் ஹஸ்ரத் சாஹிபை சந்திப்பதற்காகவே செல்கின்றேன் என்று கூறினேன். இதைக் கேட்டு அவர்கள் என்னை அதிகமாக எதிர்க்கத் தொடங்கினர்.

நான் அதுபற்றி கவலைப்படவில்லை. மாலை நேரம் கழிந்து இரவில் நான் காதியானுக்குச் செல்ல ஆரம்பித்தேன். இருள் அதிகமாக இருந்தது. இரவின் பெரும் பகுதி கழிந்திருந்தது. வழிப்பாதை நான் ஏற்கனவே பார்த்திராத பாதையாக இருந்தது. தவறுதலாக தூரத்தில் எறிந்து கொண்டிருந்த ஒரு தீபத்தை பார்த்து விட்டு மஸானியா என்ற இடத்திற்கு சென்று விட்டேன். இது காதியான் செல்லும் வழியில் இருக்கின்றது. அங்கு இசா தொழுகை முடிந்திருந்தது. ஒரு மனிதர் பள்ளிவாசலில் அமர்ந்தவாறு திக்ரே இலாஹி செய்வதில் ஈடுபட்டிருந்தார். அவர் என்னிடம் நீங்கள் எங்கிருந்து வந்துள்ளீர்கள்? எங்கு போகின்றீர்கள்? என்று கேட்டார். நான் லாஹூரிலிருந்து வந்துள்ளேன். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபை சந்திக்க விரும்புகின்றேன் என்று கூறினேன். அவர் இது மஸானியாவாகும். காதியான் அல்ல என்று பதில் கூறினார். காதியான் இங்கிருந்து வெகு தூரத்தில் இருக்கின்றது. நீங்கள் இங்கு தூங்கி விட்டு காலை நேரத்தில் செல்லுங்கள். வழிப்பாதை சரியாக இல்லை என்று அவர் கூறினார். அதனால் நான் அங்கு பள்ளிவாசலிலேயே படுத்தேன். நான்கு மணி ஆனபோது நிலவு மேலே வந்திருந்தது. இரவு வெகு நேரம் கழிந்தே தூங்கினேன். அதனால் காலையில் எழுந்ததும் நிலவொளியை பார்த்தார்.

அவர் கூறுகின்றார்: நான் அவரிடம் எனக்கு வழிகாட்டுங்கள் என்று கூறினேன். அவர் பட்டாலா வரை என்னுடன் வந்து எனக்கு காதியான் செல்லும் சாலையை காட்டிவிட்டு திரும்பினார். நான் ஒரு கால்வாயின் அருகில் வைத்து சுபுஹ் தொழுகையை தொழுதேன். சூரியன் உதயமாகி ஒரு மணி நேரம் கழிந்திருந்த சமயத்தில் காதியான் போய் சேர்ந்தேன். காதியானின் முச்சந்தியில் வைத்து நான் ஒரு நபரிடம் பெரிய மிர்ஸா சாஹிப் எங்கே? என்று கேட்டேன். அங்கு ஒருவர் குளித்து விட்டு பெரிய வீட்டின் முன்பு சிம்மாசனத்தில் அமர்ந்தவாறு அவர் ஹுக்கா குடித்துக் கொண்டிருக்கின்றார். அந்த நபர் மிர்ஸா நிஸாமுத்தீன் பற்றி சைகையாக கூறியிருந்தார். நான் இதைக் கேட்டு விட்டு முன்னால் சென்றதும் வயதில் பெரியவராக இருந்த ஒருவர் குளித்து விட்டு சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்தேன். அவரது உடல் கூட அப்போது ஈரமாகவே இருந்தது. அவர் ஹுக்கா குடித்துக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன். எனக்கு அதைப் பார்த்து விட்டு அதிகமாக வெறுப்பு ஏற்பட்டது. இவ்வளவு கஷ்டப்பட்டு மெனக்கெட்டு பயணம் செய்து காதியான் வந்து இந்த நபரையா நான் பார்க்கின்றேன் என்று வேதனைப்பட்டேன்.

கூறுகின்றார்கள்: நான் அவநம்பிக்கை அடைந்து திரும்பிச் சென்றேன். அல்லாஹ் இவருக்கு வழிகாட்ட வேண்டியது இருந்தது.

இவர் கூறுகின்றார்: செல்லும் வழியில் ஒரு திருப்பத்தில் வைத்து ஷேக் ஹாமிது அலி சாஹிப் அவர்கள் என்னை சந்தித்தார்கள். அவர்கள் என்னிடம் நீங்கள் எந்த இடத்திலிருந்து வந்துள்ளீர்கள்? யாரை சந்திக்க

விரும்புகின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நான் அவர்களிடம் நான் யாரைச் சந்திக்க வேண்டியது இருந்ததோ அவரை நான் பார்த்து விட்டேன். இப்போது நான் லாஹூருக்கு திரும்பிச் செல்கின்றேன் என்று கூறினேன். இவ்வாறு கூறியதும் அவர்கள் என்னிடம், நீங்கள் மிர்ஸா சாஹிபையா சந்திக்க வந்துள்ளீர்கள்? நீங்கள் பார்த்து விட்டு வந்த மிர்ஸா சாஹிப் அவரல்ல. அவர் வேறு நபராவார் என்று கூறினார்கள். நான் உங்களை அவரைச் சந்திக்கும்படி செய்கின்றேன் என்று கூறினார்.

அப்போது எனக்கு உயிர் திரும்ப வந்தது. நான் ஓரளவு நிம்மதியடைந்தேன். ஹாமிது அலி சாஹிப் என்னிடம் நீங்கள் ஒரு துண்டு சீட்டில் எழுதி தாருங்கள். நான் அதை உள்ளே கொண்டு போய் கொடுக்கின்றேன் என்றார்கள். நான் ஒரு துண்டு சீட்டில் சுருக்கமாக நான் ஒரு மாணவன். லாஹூரிலிருந்து வந்துள்ளேன். உங்களை சந்திக்க விரும்புகின்றேன். இன்றே திரும்பிச் செல்ல எண்ணியுள்ளேன் என்று எழுதினேன். ஹுஸூர் இதற்கு பதில் கூறி அனுப்பினார்கள். நீங்கள் விருந்தினர் விடுதியில் தங்குங்கள். உணவு உண்ணுங்கள். ளுஹர் தொழுகை சமயத்தில் சந்திக்கலாம் என்று கூறியிருந்தார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறியிருந்தார்கள்:**

இப்போது நான் ஒரு நூலை எழுதிக் கொண்டிருக்கின்றேன். அதன் கருத்து எனது மனதில் இருக்கின்றது. நான் சந்திப்பதற்காக வந்தால் அந்தக் கருத்து எனது மனதிலிருந்து அகன்று விடலாம். இதனால் நீங்கள் ளுஹர் தொழுகை வரை காத்திருங்கள் என்று கூறி அனுப்பியிருந்தார்கள்.

எனக்கு இந்தப் பதிலால் திருப்தி ஏற்படவில்லை. நான் மீண்டும் ஹஸ்ரத் சாஹிபிடம் நான் முழு இரவும் மிகவும் கஷ்டப்பட்டு இங்கு வந்து சேர்ந்துள்ளேன். உங்களை சந்திக்க விரும்புகின்றேன். அல்லாஹ்வுக்காக இப்போதே உங்களை சந்திக்கும் நற்பேற்றை வழங்குங்கள் என்று மீண்டும் துண்டுச் சீட்டில் எழுதி கொடுத்தனுப்பினேன். ஹுஸூர் அவர்கள் மாயிதாதியிடம் இவரை மஸ்ஜிது முபாரக்கில் உட்கார வையுங்கள். நான் அவரை சந்திக்க விரும்புகின்றேன் என்று கூறினார்கள். எனக்கு 15 நிமிடங்கள் வரை அங்கு உட்கார வேண்டியது வந்தது. அதற்கு ஹுஸூர் அவர்கள் மாயிதாதியிடம் அவரை இந்தப் பக்கம் அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சாஹிப் தமது வீட்டிலிருந்தும் இறங்கி தெருவில் வந்தார்கள். நானும் மறுபுறமாக அந்த தெருவிற்கு வந்து விட்டேன். தொலைவிலிருந்தே எனது பார்வை ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் மீது பட்டதுமே நான் எனது கனவில் எந்த நபரைக் கண்டேனோ அதே வடிவத்திலேயே அவர்களைப் பார்த்தேன். ஹஸ்ரத் சாஹிபின் கைகளில் அதே தடி இருந்தது. அவர்கள் தலைப்பாகையும் அணிந்திருந்தார்கள். கனவில் கண்ட அதே வடிவத்தில் அவர்கள் இருந்தார்கள். இதற்கு முன்னர் மாயிதாதி சாஹிபின் மூலமாக எனக்கு ஹஸ்ரத் சாஹிப் உடைகளை அவிழ்த்து விட்டு அமர்ந்திருக்கின்றார்கள் என்பது தெரிய வந்தது. அல்லாஹ் எனக்கு, நான் கனவில் கண்ட அதே காட்சியைக் காட்ட வேண்டும் என்ற நாட்டம் இருந்தது. ஹுஸூர் அவர்கள் எந்த ஆடையை அணிந்திருந்தார்களோ அது நான் கனவில் கண்ட அதே ஆடையாகும். நான் ஹஸ்ரத் சாஹிபின் பக்கம் சென்றேன். ஹஸ்ரத் சாஹிப் என் பக்கம் வந்து கொண்டிருந்தார்கள். கோல் கம்ராவிற்கு கொஞ்சம் முன்பாக எனது சந்திப்பு ஹஸ்ரத் சாஹிபுடன் ஏற்பட்டது.

நான் ஹஸ்ரத் சாஹிபை பார்த்ததுமே இவர்கள் கனவில் வந்த அதே பெரியவர்தான். இவர் உண்மையாளர் என்பதை அடையாளம் கண்டு கொண்டேன். பிறகு நான் ஹுஸூரைக் கட்டித் தழுவினேன். பிறகு குலுங்கி குலுங்கி அழ ஆரம்பித்தேன். அந்த அழுகை எங்கிருந்து வந்தது? ஏன் வந்தது? என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் நான் பல நிமிடங்கள் வரை அழுது கொண்டேயிருந்தேன். ஹுஸூர் என்னிடம் பொறுமையாக இருங்கள் என்று கூறினார்கள். எனது அழுகை சற்று தனிந்து எனக்கு உணர்வு வந்த போது ஹுஸூர் அவர்கள் என்னிடம் நீங்கள் எங்கிருந்து வந்துள்ளீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நான் லாஹூரிலிருந்து வந்துள்ளேன் என்று கூறினேன். ஹுஸூர் ஏன் வந்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நான் உங்களை சந்திப்பதற்காகவே வந்துள்ளேன் என்று கூறினேன். ஏதாவது முக்கியமான வேலை இருக்கின்றதா? என்று ஹுஸூர் கேட்டார்கள். அதற்கு நான் உங்களை சந்திப்பது மட்டுமே எனது நோக்கமாகும் என்று கூறினேன். அதைக் கேட்டு விட்டு ஹுஸூர் அவர்கள் சில மக்கள் துஆ செய்யுமாறு கூற வருகின்றார்கள். தங்களது நோக்கத்தை அடைவதற்காக வருகின்றார்கள். உங்களுக்கு அதுபோன்ற ஏதாவது தேவை

ஏற்பட்டுள்ளதா? என்று கேட்டார்கள். அதற்கு நான் அதுபோன்ற எந்தத் தேவையும் எனக்கு இல்லை என்று கூறினேன். அப்போது ஹுஸூர் அவர்கள் வாழ்த்துக்கள்! அல்லாஹ்வைச் சார்ந்திருப்பவர்களிடம் எவ்வித உள்நோக்கமுமின்றி இவ்வாறு வருவது மிகுந்த பயனை தரக்கூடியதாக இருக்கும் என்று கூறினார்கள். இவ்வாறு ஹுஸூர் என்னிடம் கேட்டதற்கான காரணம் என்னவென்றால் அந்த நாட்களில் ஹுஸூர் அவர்கள் ஒரு பிரசுரத்தை வெளியிட்டிருந்தார்கள். அதில் அவர்கள் சில மக்கள் என்னிடம் தங்கள் நோக்கங்கள் நிறைவேறுவதற்காக என்னிடம் துஆ செய்யுமாறு கூற இங்கு வருகின்றார்கள் என்று எழுதியிருந்தார்கள். ஆனால் எனது இந்த விசயத்தைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும் எனது நோக்கம் அவர்களை சந்திப்பது மட்டும்தான் என்னை அறிந்து தமது வாழ்த்துக்களை அவர்கள் எனக்கு தெரிவித்தார்கள்.

**ஹஸ்ரத் மலிக் குலாம் ஹுஸைன் சாஹிப் முஹாஜிர் அறிவிக்கின்றார்கள்:**

நாங்கள் எங்கள் ஊருக்குத் திரும்பி இரண்டு மாதங்கள் கழிந்த நிலையில் மீண்டும் காதியான் செல்ல வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டது. ஆனால் செலவிற்கான பணம் இல்லாமல் இருந்தது. கால்நடையாகச் செல்ல வேண்டியது வந்தாலும் நடந்தே செல்ல வேண்டும் என்று உள்ளம் விரும்பியது. இரண்டு ரூபாய் என்னிடம் இருந்தது. நான் ருஹ்தாரிலிருந்து ஜிஹ்லம் வரை போவதற்கு இரயில் வண்டி இருந்தும் நடந்தே வந்தேன். இதற்குப் பிறகும் தொடர்ந்து நடந்தே செல்ல வேண்டும் என்ற எண்ணம் வந்தது. ஜிஹ்லமிலுள்ள பாலத்தை நான் கடந்து வந்த சமயத்தில் சிப்பாய்கள் குதிரைகளுடன் அங்கு செல்வதை நான் பார்த்தேன். நான் அவர்களிடம் குதிரையை எனக்கு தாருங்கள் என்றேன். அதற்கு அவர்கள் நீ குஜ்ராத் மாவட்டத்தைச் சேர்ந்தவனாவாய். நீ குதிரையை எடுத்துக் கொண்டு எங்காவது ஓடிப்போய் விடக் கூடாதே! என்ற அச்சம் எங்களுக்கு இருக்கின்றது என்றனர். நான் அவர்களிடம் நான் ஜிஹ்லம் மாவட்டத்தைச் சேர்ந்தவன். குஜராத்தைச் சேர்ந்தவனல்ல. நான் ருஹ்தாரிலிருந்து வருகின்றேன் என்று கூறினேன். அவர்கள் நான் கூறியதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் நான் அவர்களுடன் இருந்தேன். அந்த சிப்பாய்கள் இரவிலும் பயணத்தில் இருந்தனர். அவர்கள் மராலே என்ற இடத்தில் இறங்கியதும் நானும் எனது படுக்கையை அங்கேயே விரித்தேன். அவர்களில் சீக்கியர் ஒருவர் என்னிடம் மியான்! நீங்கள் எங்கள் பின்னால் வருவதை விடமாட்டீர்களா? என்று கேட்டார். எங்களுக்கு உன்னைப் பற்றிய அச்சம் இருக்கின்றது என்று கூறினார். பாதி இரவு கழிந்ததும் அவர்கள் மீண்டும் செல்ல ஆரம்பித்தனர். நானும் அவர்களுடன் செல்ல ஆரம்பித்தேன். பிறகு இன்னொரு சீக்கியர் நீ எங்கள் குதிரையைக் கொண்டு போய் விடக்கூடாதே என்ற பயம் எங்களுக்கு இருக்கின்றது என்று கூறினார். நான் விரைவாக செல்ல விரும்புகின்றேன். நேரம் விரைவில் கழிய வேண்டும் என்பதற்காகவே நான் உங்களுடன் வந்து கொண்டிருக்கின்றேன் என்று கூறினேன். ஒரு சீக்கியர் இவர் நல்ல மனிதர் போன்று எனக்கு தோன்றுகிறது. அவருக்கு குதிரையைக் கொடுங்கள் என்று கூறினார். அதனால் 3 மைல்கள் வரை நான் குதிரையில் சவாரி செய்தவாறு பயணமானேன். இரவில் வஸீராபாத் வந்து சேர்ந்தோம். பாலத்தைக் கடந்து செல்வதற்காக செலவாகும் பணத்தையும் அவர்களே தந்தார்கள். டால்டேக்ஸ் ஏதாவது கொடுக்க வேண்டியது இருந்திருக்கும். அதையும் எனக்கு தந்தார்கள். இரவு உணவையும் எனக்கு வழங்கினார்கள். இரவு 1.00 மணிக்கு மீண்டும் அவர்கள் தயாரானார்கள். எனக்கு குதிரையை தந்தார்கள். மறுநாள் இரவு காமோல்கி அல்லது முரீக்கே என்ற இடத்தில் தங்கினார்கள். பிறகு அவர்கள் எனக்கு உணவு வழங்கினார்கள். பிறகு இரவில் நடந்து காலை 6 அல்லது 7 மணிக்கு லாஹூர் வந்து சேர்ந்தோம். இது ஏறக்குயை 100 அல்லது 150 மைல்களுக்கான பயணமாகும். லாஹூர் வந்த பிறகு அவர்களது வழி வேறு வழியாக இருந்ததால் அவர்கள் பிரிந்து சென்றனர். லாஹூரிலிருந்து 11.00 மணிக்கு இரயில் செல்ல வேண்டியது இருந்தது. நான் 8.00 மணிக்கு அங்கு வந்து சேர்ந்த விட்டேன். யார் மூன்று மணி நேரம் காத்திருப்பது என்ற எண்ணத்தில் மீண்டும் நான் கால்நடையாக செல்ல ஆரம்பித்தேன் என்று இவர் கூறுகின்றார். காதியான் செல்வதற்கான ஆர்வம் இந்த அளவு இருந்தது. ஒன்றரை மணி நேரத்தில் நான் ஜெல்லு வந்து சேர்ந்தேன். அங்கு ஸ்டேஷனில் இரயில் வண்டி எப்போது வரும்? என்று கேட்ட போது, அது 11.45 மணிக்கு வரும் என்று அவர்கள் தெரிவித்தார்கள். பிறகு அங்கிருந்து நடந்து அட்டாரி வந்து சேர்ந்ததும் ஸ்டேஷனுக்குச் சென்றதும் இரயில் வர இன்னும் ஒன்றேகால் மணி நேரம் இருக்கின்றது என்று கூறினார்கள். ஏன் காத்திருக்க வேண்டும்? என்று நினைத்து மீண்டும் நடக்க ஆரம்பித்தேன். 2 மைல் தூரத்தில் காஸா ஸ்டேஷன் இருந்தது. காஸா ஸ்டேஷன் சென்ற போது இரயில் போய் விட்டது என்பது தெரிய வந்தது. இனி இரவு 7.00

மணிக்குத்தான் இரயில் வரும் என்பதும் தெரிந்தது. பிறகு நான் மீண்டும் நடக்க ஆரம்பித்தேன். மாலை பொழுதுக்கு முன்பே அமிர்தசரஸ் வந்து சேர்ந்து விட்டேன். எங்களது நகரத்தைச் சார்ந்த ஒரு நபர் அங்கிருந்தார். அவரிடம் தங்கி இரவைக் கழித்தேன். பிறகு காலையில் இரயில் பயணம் செய்து 6 அனா கொடுத்து பட்டாலா வந்து சேர்ந்தேன். பிறகு நடந்து 4 அல்லது 5 மணிக்கு காதியான் வந்து சேர்ந்தேன்.

அடுத்த நாள் காலை ஹஸ்ரத் சாஹிபை சந்தித்தேன். நான்கைந்து நாட்கள் அங்கே சுகமாக கழித்தேன். பிறகு அவர்களிடம் அனுமதி கேட்டு விட்டு கூறினேன். நாங்கள் சிறு வயதில் அல்லாஹ்வே! இமாம் மஹ்தி தோன்றினால் நாங்கள் அவர்களது சிப்பாய்களாக ஆவதற்கான நல்வாய்ப்பை எங்களுக்கு வழங்குவாயாக! என்று கூறிக் கொண்டிருந்தோம். பயணத்தின் முழு சம்பவத்தையும் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினேன். பயணத்தின் பெரும்பாலான பகுதியை நடந்தே கழித்தேன். சிறிது தூரம் குதிரையிலும் பயணம் செய்தேன் என்றும் கூறினேன். இதைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், நீங்கள் மிகவும் தைரியமாக செயலாற்றியுள்ளீர்கள் என்று கூறினார்கள். பிறகு உங்களுக்கு ஏதாவது வேலை தெரியுமா? என்று ஹஸ்ரத் சாஹிப் கேட்டார்கள். எனக்கு ரொட்டி சுடுவதை தவிர வேறு எந்த வேலையும் தெரியாது. அதுவும் ஓரளவே தெரியும் என்று நான் கூறினேன். அதற்கு அவர்கள், உங்களது பெயரை எழுதித் தந்து விட்டு செல்லுங்கள். தேவைப்படும் போது உங்களை அழைப்போம் என்று கூறினார்கள். பிறகு நான் குலாம் ஹுஸைன் ஜிஹ்லம் மாவட்டம் என்று பெயர் எழுதிக் கொடுத்தேன்.

இதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்திப்பதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்துகின்ற பல்வேறு அறிவிப்புகளாகும். அவர்களை சந்திப்பதற்காக அவர்கள் துன்பங்களைச் சகித்துக் கொண்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக அவர்கள் எதைப் பெற்றுக் கொண்டார்களோ அதற்கு எதிரில் அந்த துன்பங்கள் அவர்களுக்கு மிகவும் சாதாரணமானவையாக இருந்தது. அந்த சந்திப்பின் மூலம் அவர்களது அறிவும் அதிகரித்தது. நம்மில் ஒவ்வொருவரும் இந்த சம்பவங்களைக் கேட்டு விட்டு சம்பவங்கள் என்ற அளவில் மட்டும் கேட்டு விட்டு அதிலிருந்து இன்பத்தைப் பெறுபவர்களாக மட்டும் இருக்காமல் அல்லாஹ் செய்வானாக! மாறாக ஒவ்வொரு சம்பவமும் நமது ஈமானையும் அதிகரிக்கச் செய்யக் கூடியதாக இருக்கட்டுமாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 04.05.2012

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456